www.tamilarangam.net

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

## PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM



The Revolutionary War

அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்
PEOPLE'S LIBERATION ORGANIZATION ★ THAMILEELAM ★
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
DEMOLISH ALL REPRESSION
P.L.O.T



எங்கள் மக்களே எம்மைப் புரட்சியாளர்களாக ஆக்கியுள்ளார்கள். தமிழீழ மக்களது முழுமையான விடுதலையே எங்கள் தலையாய நோக்கமாகும். பரந்துபட்ட தமிழீழ மக்களின் ஆயுதம் ஏந்திய புரட்சிகரப் போராட்டத்தின் மூலமே தமிழீழ விடுதலையை அடைய முடியும். ஒன்று திரண்ட மக்கள் ஆதரவுடன் விரைவில் தமிழீழத்தை வென்றெடுப்போம்.

க. உமாமகேசுவரன்

''வெகுவிரைவில் இறுதிப்போர் தொடங்கும்; அதன் விளைவு தீர்மானகரமாக இருக்கும். ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் ஆகியவற்றின் நாட்கள் எண்ணப்பட்டுவிட்டன. அதற்கானதோர் போராட்டத்தில் நாங்கள் பங்குகொண்டோம்; அதற்காக நாங்கள் பெருமைப்படுகின்றோம்.''

— பகத்சிங்

''கைகளிலும் விலங்கு, கால்களிலும் விலங்கு;
சிந்தனை சிறைப்பட்டு வாய்களிலும் பூட்டு!
அந்நிய நுகத்தடியில் அடிமைச் சுமையழுத்த
நசுங்கி இனிக் கிடக்கும் நாட்கள் ஒரு சிலதான்''

— ஃபைஸ் அஹமத் ஃபைஸ்

★ அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம் ★

www.tamilarangam.net

★ **பிரான்ஸ் வாழ் தமிழீழமக்கள் கவனத்திற்கு!!** ★

"புளொட்டின்
குறைபாடுகள் அம்பலம்" என்ற தலைப்பில் ஒரு
சுயவிலாசமற்ற குழுவினரால்? **தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின்** அங்கத்த-
-வர்களுக்காக, விசேஷமாக வெளியிடப்பட்ட அதிகாரபூர்வமான வெளியீடு; மறு
வெளியீடு! செய்யப்பட்டுள்ளது. இவ்வெளியீட்டில் உள்ள, கருத்துக்களுக்கு
எவ்விதத்திலும் கருத்துத் தொடர்பில்லாத வசனங்கள், கேள்விகளைச் சேர்க்கப்பட்டு
உள்ளது. இவ்வெளியீட்டை மறு வெளியீடு செய்து கொண்டவர்களுக்கு எமது
**நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.** கடந்த சில மாதங்களாக தமிழீழத்தில்
நடைபெற்ற இராணுவ அட்டூழியங்களால், தமிழ்மக்களின் கடுமையான விமர்-
-சனத்துக்கு உள்ளாகியுள்ள இவர்கள்; பொருள்முதல் வாத சிந்தனை இன்றி, கருத்துச்
-சிந்தனைகளும் இழந்து, கவர்ச்சிகரமான புதிய திரைப்பட வெளியீடுகளைப்போல
பலவித தலைப்புக்கள் கொண்ட வெளியீடுகளை, பிரசுரித்துக்கொண்டிருக்கின்றனர்.
பிரான்ஸ் வாழ் தமிழீழமக்களிடையே பிரசுரத்துக்குப் பிரசுரம் வெளியிட்டு **தங்களை
நினைவுபடுத்த** வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர். கடுமையான
எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்து, தமிழீழ மக்கள் விடுதலைக்
கழகம் **உறுதியாக, வெகுவேகமாக, வளர்ச்சி** அடைந்து வருவதை **ஜீரணிக்க**
முடியாதவர்களாகி உள்ளார்கள். இவர்களைப்பற்றி விமர்சித்து ஆயிரம், ஆயிரம்
துண்டுப்பிரசுரங்களை எங்களால் வெளியிட முடியும். ஆனால் நாம் கஷ்டப்-
-பட்டு உழைக்கும் மக்களின் பணத்தை எமது தாயகத்தின் விடுதலைக்காகவே
பயன்படுத்துவோம். **வீண் விரயம்** செய்ய விரும்பவில்லை என்பதை பிரான்ஸ் வாழ்
தமிழீழ மக்களுக்கு **உறுதியாக** தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது கழகம்
மிகவும் உறுதியான கட்டுக்கோப்பும், சிந்தனைத் தெளிவும் கொண்ட மிகப் பெரிய மக்கள்
இராணுவ அமைப்பைக் கொண்டுள்ளது. எம்மிடம் தெளிவான அரசியல் சித்தாந்தம்
உள்ளது. எமது அங்கத்தவர்கள் எல்லோரும் அரசியல் சித்தாந்தத்தில் தெளிவான அறிவு
கொண்டவர்கள். தமிழீழமக்களையும் அரசியல்மயப்படுத்தி கிராமிய ரீதியில் மக்கள்
அமைப்புக்களைக் கட்டி இயங்கி வருகின்றோம். **வெகுவிரைவில்** (நேரடி,
போராட்டமொன்றைச்சந்திக்க நாம் எம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.
**சர்வதேச ரீதியில்** எமது கழகம் ஒரு நிலையான, இரும்பு போன்ற உறுதியுள்ள
விடுதலை இயக்கமாக அங்கீகரிக்கப்படும் நிலை உண்டாகியுள்ளது. **இதைப்**
பொறாமை கொண்டவர்கள் பலவகையான அவதூறுப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர்.
இவையனைத்தும் முன்னைய பிரசாரங்களைப்போல் **மக்களால் நிராகரிக்கப்படும்.**
மேற்கொண்டு இவ்விவகாரத்தில் இறங்க விரும்பவில்லை,

**எங்குற்றான் தமிழன் என்றுலகம் கேட்பதற்குள்!**
**இங்குற்ற தமிழரெல்லாம் ஒன்றுபட்டே!**
**பொங்குற்ற எதிரிகளைப் பொடி செய்வோம்!**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்